இந்து தமிழ் திசை

4 CHENNAI வியாழன், மே 16, 2019

# செவிலியர்கள் மருத்துவமனைகளின் அறிமுக முகமாக விளங்கலாம்

● ரயில்வே காவல்துறை டைரக்டர் ஜெனரல் சைலேந்திரபாபு கருத்து

■ சென்னை

போரூரில் உள்ள ஸ்ரீ ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் சர்வதேச செவிலியர் தின விழா நேற்று நடைபெற்றது.

நிகழ்ச்சியில் தமிழக ரயில்வே காவல்துறை டைரக்டர் ஜெனரல் சி.சைலேந்திரபாபு பங்கேற்று, சிறந்த 10 செவிலியருக்கு விருதுகளை வழங்கினார்.




▶▶ ஸ்ரீ ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற சர்வதேச செவிலியர் தின விழாவில் சிறந்த செவிலியருக்கு தமிழக ரயில்வே காவல்துறை டைரக்டர் ஜெனரல் சி.சைலேந்திரபாபு விருது வழங்கினார். பல்கலை. துணைவேந்தர் டாக்டர்.விஜயராகவன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பின்னர் அவர் பேசும்போது, "ஒருவர் யாராக இருந்தாலும் நோய் ஏற்படும்போது வலியும் கவலையும் கொண்டவராகவே இருப்பார். அவர்களுக்கு செவிலியர்கள் பரிவுடன் பணி செய்தால், நோயாளிகளின் துன்பம் நீக்குவது மட்டுமல்லாமல் நம்பிக்கையை ஊட்டி விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். இதன் மூலம் ஒரு மருத்துவமனைக்கு செவிலியர்கள் சிறந்த அறிமுக முகமாக விளங்க முடியும்" என்றார்.

பின்னர், துணைவேந்தர் டாக்டர். விஜயராகவன் பேசும்போது, "தற்போது ரோபோக்கள் மருத்துவத் துறையில் அதிகம் பயன்படுத்தப்பட்டு வந்தாலும், செவிலியர்கள் மிக முக்கியமானவர்களாகவே விளங்குவார்கள். மருத்துவமனைகளுக்கான தேசிய வாரியத்தில் அங்கீகாரத்துக்காக விண்ணப்பித்துள்ளோம். விரைவில் தணிக்கை நடைபெறும்" என்று கூறினார்.

நிகழ்ச்சியில் ஸ்ரீ ராமச்சந்திரா கல்வி மற்றும் மருத்துவ அறக்கட்டளையின் அறங்காவலர் சம்யுக்தா வெங்கடாசலம், மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர்.என்.ஜம்பு, செவிலியர் கண்காணிப்பாளர்கள் பி.சுசீலா, இ.ஞானதீபம், செவிலியர் கல்வித்துறை தலைவர் டாக்டர். எஸ்.ஜெ.நளினி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். ●